50 years சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம்

நவீன இந்தியாவின் அரசியல் வரலாற்றில் முக்கியமான மையங்களில் ஒன்றாக விளங்கிய சென்னை அடையாறு, இன்று ஆய்வுலகின் மையமாகத் தன் வரலாற்றுப் பயணத்தைத் தொடர்கிறது. தேசிய அளவில் இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி மன்றம் (ஐசிஎஸ்எஸ்ஆர்)1969-ல் நிறுவப்பட்டது. அதற்கு இரண்டு ஆண்டுகள் கழித்து நிறுவப்பட்டது, சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் (எம்ஐடிஎஸ்). தற்போது நாட்டிலுள்ள 24 ஐசிஎஸ்எஸ்ஆர் ஆராய்ச்சி நிறுவனங்களில் ஒன்றாகச் செயல்பட்டுவருகிறது. தொடங்கப்பட்ட காலம் முதல் தேசியத் திட்டக் குழுக்கள், பல்வேறு மாநிலங்களின் திட்டக் குழுக்களில் இந்நிறுவனத்தின் பேராசிரியர்கள் பங்களித்துவருகிறார்கள். அத்துடன் மத்திய, மாநில அரசுகளுக்கான பல்வேறு ஆராய்ச்சிகள், ஆய்வு அறிக்கைகளை எம்ஐடிஎஸ் தயாரித்து வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் கால்பதிக்கும் புகழ்பெற்ற வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள் உரை நிகழ்த்தும், விவாதிக்கும் இடமாக எம்ஐடிஎஸ் இன்றைக்கும் திகழ்கிறது. எம்ஐடிஎஸ் நிறுவனர் மால்கம் ஆதிசேசய்யாவின் நினைவு நாளான இன்று அவரை நினைவுகூர்வதுடன், பொன் விழா தருணத்தில் எம்ஐடிஎஸ்ஸின் சிறப்புகளைக் குறித்த ஒரு தொகுப்பு:



வானவில் அரங்கம்

மால்கம் ஆதிசேசய்யா: அறிவுத் துறைகளின் பன்னாட்டுத் தூதுவர்

ப.கு.பாபு

இந்தியாவின் திறன்களை வளர்ப்பதற்கான அயராத முயற்சிகளுக்காகவும், குறிப்பாக வளரும் நாடுகளின் கல்வி, அறிவியல், கலாச்சாரக் கட்டமைப்புகளுக்கு யுனெஸ்கோவின் துணை இயக்குநர் நாயகமாக இருந்து ஆற்றிய சேவைகளுக்காகவும், இன்றளவும் நினைவுகூரப்படுபவர் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் (எம்ஐடிஎஸ்) நிறுவனரான மால்கம் ஆதிசேசய்யா. வேலூர் ஊரிஸ் கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய பால் ஆதிசேசய்யா–நேசம்மா ஆகியோருக்கு 1910 ஏப்ரல் 18–ல் பிறந்தார். வேலூர் ஊரிஸ் பள்ளியிலும், சென்னை லயோலா கல்லூரியிலும் பயின்ற ஆதிசேசய்யா, முதுகலைப் பட்டத்தை கேம்பிரிட்ஜ் கிங்ஸ் கல்லூரியில் பெற்றார். கொல்கத்தாவில் உள்ள செயின்ட் பால்ஸ் கல்லூரியில் பொருளாதார விரிவுரையாளராகப் பணியைத் தொடங்கிய அவர், முனைவர் பட்டத்தை லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் நிறுவனத்தில் பெற்றுத் திரும்பிய பின், சென்னை கிறித்துவக் கல்லூரியில் சிறிது காலம் பேராசிரியராகப் பணியாற்றினார்.

யுனெஸ்கோவிலிருந்து தாமாக ஓய்வுபெற்று, தன் துணைவியார் எலிசபெத்துடன் சேர்ந்து 1971–ல் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தைத் தொடங்கினார். இந்நிறுவனத்தின் செயல்பாடுகளாலும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பொறுப்பு வகித்த குறுகிய காலத்தில் அவர் செய்த பல்வேறு சாதனைகளாலும், மத்திய—மாநிலக் கல்வி, அறிவியல், பொருளாதார, சமூகக் கொள்கைகளை உருவாக்குவதில் அளித்த பங்களிப்பு ஆகியவற்றாலும் எல்லோராலும் அறியப்பட்டவர். ஆதிசேசய்யாவின் முயற்சியாலும் தொலைநோக்காலும் 1971–ல் தொடங்கப்பட்ட எம்ஐடிஎஸ் இந்திய அரசின் ஐசிஎஸ்எஸ்ஆர் அமைப்பின் கீழ் 1977–ல் தேசிய நிறுவனமாக அடையாளம் காணப்பட்டுச் சீரமைக்கப்பட்டது. தமிழ்நாட்டின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றி ஆய்வு செய்வதற்கென ஓர் உயராய்வு அமைப்பு வேண்டுமென விழைந்த ஆதிசேசய்யா தன் உழைப்பையும் செல்வத்தையும் இதற்காக முழுமையாகக் கையளித்தார். வறுமை, நிலச் சீர்திருத்தம், சிறார் தொழிலாளர் நிலை, தொழில் துறை, நீர்வளம், பாசன மேலாண்மை, மக்கள்தொகையியல், எழுத்தறிவு, இடஒதுக்கீடு, உள்ளாட்சி, ஊரக ஆய்வுகள், சமூக–பண்பாட்டு வரலாறு, பாலினம், உலக வர்த்தகம் முதலானவை பற்றிய முன்னோடியான, சீரிய ஆய்வுகளை எம்ஐடிஎஸ் நிகழ்த்தியுள்ளது. எம்ஐடிஎஸ், சென்னைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற முனைவர் பட்ட ஆய்வு மையமாகவும் விளங்குகிறது.

கால் நூற்றாண்டாக யுனெஸ்கோவில் பணியாற்றினாலும் ஆதிசேசய்யாவுக்குத் தமிழ் மொழி மீதும் தமிழ்ப் பண்பாடு மீதும் அங்கு பணியாற்றும்போதே மிகுந்த பற்று இருந்தது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. யுனெஸ்கோவில் அலுவல் மொழியாக இருந்தவற்றில் (பிரெஞ்சு, சீனம், ஸ்பானிஷ், ரஷ்யம், அரபு, ஆங்கிலம்) மட்டுமே வெளியாகிக்கொண்டிருந்த 'கூரியர்' மாத இதழை 1967–லிருந்து தமிழிலும் கொண்டுவர ஏற்பாடுசெய்தது; மூன்றாம் உலகத் தமிழ் மாநாட்டை பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடத்துவதற்கு உதவியது; அந்த மாநாட்டின் தொடக்க உரையை பிரெஞ்சு, ஆங்கிலத்தோடு தமிழிலும் ஆற்றியது; திருக்குறளை யுனெஸ்கோ மூலம் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ரஷ்யன், ஜெர்மன், அரபு மொழிகளில் வெளியிட்டது; கட்டிடக் கலைக்குப் பெயர்போன தமிழ்நாட்டுக் கோயில்களைப் புனரமைக்கவும் பாரம்பரியச் சின்னங்களைப் பாதுகாக்கவும் உதவியது; 1970–ல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடங்க யுனெஸ்கோ மூலம் உதவியது; தமிழ் அறியாத அயலகத்தார் தமிழ் கற்றுக்கொள்ள வசதியாக ஒலி–ஒளிக் கருவிகளை நன்கொடையாக அளித்தது என்று அவரின் தமிழ்ப் பங்களிப்பு நீண்டுகொண்டே போகும்.

ஒவ்வொரு வருடமும் தம்முடைய நுண்ணறிவுமிக்க ஆய்வுப் பார்வையில் இந்தியாவின் வருடாந்திரப் பொருளாதார, சமூக மதிப்பீட்டை 'டெல்லி இந்தியா இன்டர்நேஷனல் சென்ட'ரில் நிகழ்த்திவந்தார் ஆதிசேசய்யா. 'எம்ஐடிஎஸ் புல்லட்டின்' மாத இதழின் வாயிலாகப் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார். இவ்விதழின் தலையங்கங்களில் அந்தந்த மாதம் உலக அளவில், இந்திய அளவில், மாநில அளவில் நடைபெற்றுள்ள வளர்ச்சியையும், புதிய திட்டங்களையும் பற்றிய அவரது மதிப்பீடு ஆய்வு மாணவர்களுக்குப் பெரிதும் பயனளிப்பதாக இருந்தன. இவ்விதழ்கள், நூலகத்தில் உள்ள அரிய நூல்கள் ஆகியவை அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் உதவியுடன் தரமான முறையில் மின்னாக்கம் செய்யப்பட்டுள்ளன.

தென்னகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களின் கூட்டம், பல்கலைக்கழகத் துறைத் தலைவர்களின் கூட்டம், ஆசிரியர்கள், ஆய்வு மாணவர்களுக்குத் தனித்தனியாக வருடாந்திரப் பயிற்சி, துறைகளுக்கு இடையேயான பயிற்சி, வெவ்வேறு துறைசார்ந்த அறிஞர்கள், வல்லுநர்களை அழைத்து கருத்தரங்கங்கள் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக எம்ஐடிஎஸ் சார்பில் நடத்திவந்த ஆதிசேசய்யா, ஊரக அளவிலான ஆய்வுகளையும், வட்டார மொழி சார்ந்த ஆய்வுகளையும் ஊக்குவித்துவந்தார்.

நிறுவனம் பொன்விழா காணும் இத்தருணத்தில், ஆதிசேசய்யாவைப் போற்றும் வகையில் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்ட அவரது சில கட்டுரைகளைத் தொகுத்து, அவருடைய வாழ்க்கைக் குறிப்பு, பங்களிப்பு ஆகியவற்றையும் தெரிவிக்கும் வகையில் 'இந்தியப் பொருளாதாரம்: வரலாறு காட்டும் வழிகள்' என்ற நூலை அண்மையில் வெளியிட்டுள்ளோம்.

- ப.கு.பாபு, இயக்குநர்,
சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம்

மால்கம் ஆதிசேசய்யா பேசுகிறார்...

விவசாய உற்பத்தியில் தற்சார்பு?

உணவு தானிய உற்பத்தியில் நாம் தற்சார்பு நிலையை அடைந்திருந்தபோதிலும் நமது நாட்டின் வளர்ந்துவரும் மக்கள்தொகை முழுவதற்கும் போதிய உணவு உற்பத்தி செய்கிறோம் என்ற பொருளில் அது இல்லை. உணவு தானியங்களுக்குச் சந்தையில் உள்ள தேவையை நிறைவேற்றும் அளவுக்கு நமது உற்பத்தி இருக்கிறது என்பதே இதன் பொருள். ஏனென்றால், பெரும்பாலான ஏழை மக்களின் வாங்கும் சக்தி குறைவாக இருப்பதால், இவர்களின் உணவுத் தேவை சந்தைத் தேவையாகக் கணக்கில் வருவதில்லை. பல்வேறு பிராந்தியங்களுக்கு இடையிலும், பிராந்தியங்களுக்குள்ளேயே பல்வேறு பகுதிகளுக்கு இடையிலும் விநியோகத்தில் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. நமது மொத்தச் சாகுபடி நிலப்பரப்பில் 70 சதவீதமான மானாவாரி நிலங்கள் கவனிப்பின்றிப் புறக்கணிக்கப்படுகின்றன என்பது ஒருபுறம் இருக்க, மாநிலங்களுக்கு இடையே நபர் சராசரி உற்பத்தியிலும் பெரிதும் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன.

நியாயமான உரிமை

வேலைசெய்யும் உரிமையை அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமையாக்க வேண்டும் என்று கோருவதில் நியாயம் இருக்கிறது. நம் நாட்டில் நீண்ட காலமாக இருந்துவரும் வறுமைப் பிரச்சினையைத் தீர்க்க ஏற்றதொரு வழி வேலை செய்யும் உரிமையை அடிப்படை உரிமையாக்குவதுதான். இவ்வசதி ஏற்பட்டால், யார் வேண்டுமானாலும் இவ்வுரிமை நிறைவேற்றப்படாமை குறித்து, மத்திய - மாநில அரசுகள் மீது வழக்குத் தொடர்ந்து, உடனடியாக அவ்வுரிமையை நிலைநாட்டவோ, அல்லது உரிய இழப்பீட்டுத் தொகையைப் பெறவோ முடியும். இதன் காரணமாக, ஒவ்வொரு கிராமத்திலும் ஒன்றியத்திலும் மாவட்டத்திலும் நிலவும் வேலைவாய்ப்பு, வேலையின்மை ஆகிய விவரங்களை அரசாங்கம் தொகுத்து வைத்திருப்பதுடன், வேலைசெய்யும் உரிமைக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்குத் தேவையான வேலைவாய்ப்புத் திட்டங்களுடன் எப்போதும் ஆயத்தமாக இருக்கும். வேலைசெய்யும் உரிமையை அடிப்படை உரிமையாக்க வேண்டுமானால், பட்ஜெட் ஒதுக்கீட்டில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்குத் தேவையான நிதியை முதலில் ஒதுக்கிவிட்டு எஞ்சியவற்றில் மட்டுமே பிற செலவினங்களுக்கு ஒதுக்க வேண்டும்... பாதுகாப்பு எனும்போது எதுவும் கேட்காமல் ஒப்புக்கொள்கின்ற போக்கு வேலைசெய்யும் உரிமைக்குத் தேவையான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கும் இருக்க வேண்டும்.

எம்ஐடிஎஸ் சமீபத்திய வெளியீடான 'இந்தியப் பொருளாதாரம்: வரலாறு காட்டும் வழிகள்' (தொகுப்பு: ஆ.அறிவழகன்) நூலிலிருந்து...

என் வாழ்வின் நல்வாய்ப்பு

ஜெ.ஜெயரஞ்சன், துணைத் தலைவர், மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு

அடையாறில் தற்போது எம்ஐடிஎஸ் செயல்பட்டுவரும் 79, இரண்டாவது பிரதான சாலைக் கட்டிடமானது, அதன் நிறுவனர் மால்கம் ஆதிசேசய்யாவுக்குச் சொந்தமானது. ஆய்வு மையத்தையும்கூட முதலில் அவரது சொந்தப் பணத்திலிருந்துதான் நடத்திவந்தார். இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி மன்றம் (ஐசிஎஸ்எஸ்ஆர்), ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு ஆய்வு மையத்தைத் தொடங்க வேண்டும் என்று முடிவெடுத்தபோது, அம்மன்றம் கேட்டுக்கொண்டதன் பேரில், தனது சொந்தச் செலவில் நடத்திக்கொண்டிருந்த ஆய்வு மையத்தை அரசின் ஆய்வு மையமாக மாற்றிவிட்டார். தற்போது ஒன்றிய அரசும் மாநில அரசும் சேர்ந்து அந்த ஆய்வு மையத்துக்கு நிதி நல்கைகள் அளித்துவருகின்றன.

பொருளாதாரம், அரசியல், வரலாறு, மொழியியல் என்று பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதே எம்ஐடிஎஸ் ஆய்வு மையத்தின் முக்கியமான பணி. முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கான நல்கைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுவருகின்றன.

1983-ல் நடந்த நுழைவுத் தேர்வில் முதல் மாணவராக வெற்றிபெற்று நல்கையைப் பெற்று, அங்கு நான் ஆய்வு மாணவராகச் சேர்ந்தேன். நான்கைந்து ஆண்டுகள் அங்கு நான் ஆய்வு மாணவராக இருந்தேன். அதன் பிறகு, உடனடியாகப் பணிக்குச் செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டு, புதுவை அரசுக் கல்லூரி ஆசிரியராகப் பணியில் சேர்ந்தேன். மூன்றாண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிவிட்டு, மீண்டும் எம்ஐடிஎஸ் திரும்பிவந்து ஆய்வுத் திட்ட ஆலோசகராக நான்கு ஆண்டுகள் பணியாற்றினேன். நான்கு ஆண்டுகள் ஆய்வு மாணவராக இருந்ததும் நான்கு ஆண்டுகள் ஆய்வுத் திட்ட ஆலோசகராகப் பணியாற்றியதும் என்னுடைய வாழ்க்கையைப் புரட்டிப்போட்ட நிகழ்வுகள். என் வாழ்வின் நல்வாய்ப்பு என்றே அதை நான் சொல்வேன். ஏனென்றால், என்னுடைய பள்ளி, கல்லூரிப் படிப்புகள் ஒரே ஊரில் அமையவில்லை. என் தந்தையின் பணி காரணமாக, தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் நான் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்திருக்கிறேன். கல்லூரிப் படிப்பை மட்டும் மதுரையில் படித்தேன். பெரும்பாலும் சிறுநகரங்களிலேயே படித்த மாணவனான எனக்கு, இங்கு நிலவிய ஆய்வுச் சூழல் ஆச்சரியம் அளித்தது. என் கல்விக் கண்ணைத் திறந்துவிடும் இடமாக அது அமைந்தது. அங்கு படித்ததன் தாக்கத்தை இன்று வரையிலும் என்னால் உணர முடிகிறது. பார்வை விசாலமடைந்தது மட்டுமின்றி, பல துறைகளைப் பற்றிப் படித்துத் தெரிந்துகொள்ளவும் பேசவும் விவாதிக்கவுமான ஒரு பண்பாட்டுடன் வளர முடிந்தது. அதன் தாக்கத்தோடு வாழ்நாள் அளவும் பயணிக்க முடிகிறது. அந்த அரும்பெரும்பேற்றை எம்ஐடிஎஸ் எனக்கு வழங்கியது.

அங்கு படித்துவிட்டு வந்த என்னைப் போன்ற மாணவர்கள் பலரும் என்றென்றும் நினைவுகூரும் இடமாக எம்ஐடிஎஸ் அமைந்துள்ளது. இந்த ஐம்பதாண்டுகளை மட்டுமல்ல, இன்னும் பல ஐம்பதாண்டுகளை அந்நிறுவனம் சமாளித்து வெற்றிகரமாகப் பயணிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதே போன்று, ஆய்வு மாணவர்களைத் தயாரித்து உலகெங்கும் அனுப்பிவைத்து, அங்கிருக்கும் அறிவுச் செல்வங்களால் அவர்கள் தத்தம் துறைகளுக்கு வளம்சேர்க்கும் பணிகளும் தொடர வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

எம்ஐடிஎஸ் நிறுவனமும் தமிழும்

ஆ.இரா.வேங்கடாசலபதி, பேராசிரியர், எம்ஐடிஎஸ்

ஐம்பதாண்டுகளுக்கு முன் எம்ஐடிஎஸ் என்ற ஆய்வு நிறுவனத்தை மால்கம் ஆதிசேசய்யா தொடங்கியபோது, அவருடைய நோக்கங்களில் ஒன்று, சமூக அறிவியலைத் தமிழில் பரவலாக்க வேண்டும் என்பது. இதற்குப் பெரிய தடைக்கல்லாக இருப்பது, உயர் கல்வித் துறையில் உள்ள பெரும்பாலானோர் தாய்மொழி மீது கொண்டிருக்கும் உதாசீனமும் பாராமுகமுமாகும்.

ஆதிசேசய்யா காலத்திலேயே இதன் தொடர்பில் சில முன்னெடுப்புகள் நடந்தன. சி.டி.குரியன் தமிழக கிராமப்புறப் பொருளாதார மாற்றங்கள் பற்றி எழுதிய முக்கியமான ஆய்வை 1980-களின் கடைசியில், சென்னை புக்ஸ் நிறுவனம் தமிழாக்கி வெளியிட்டது. தமிழக அரசின் நிதிச் செயலாளராக இருந்து, பின்னர் எம்ஐடிஎஸ் பேராசிரியரான எஸ்.குகன், நாட்டிய மேதை பாலசரஸ்வதியின் கட்டுரைகள் சிலவற்றையும் உ.வே. சாமிநாதையரின் சுற்றுச்சூழல் சார்ந்த 'இடையன் எறிந்த மரம்' என்ற கட்டுரையையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தமிழுக்கும் ஆங்கிலத்துக்குமான உரையாடலில் குகன் கொண்டிருந்த அக்கறைக்கு இது சான்று. 1990-களில் எம்.எஸ்.எஸ்.பாண்டியன் எழுதிய கட்டுரைகள்- முக்கியமாக, தேசியம் பற்றிய பெரியாரின் பார்வை, தமிழ்த் திரைப்பட வரலாறு குறித்தவை - 'காலச்சுவடு' இதழில் மொழிபெயர்க்கப்பட்டன. 'பராசக்தி' பற்றி பாண்டியன் எழுதிய கட்டுரையை 'முரசொலி' தொடராக வெளியிட்டது.

புத்தாயிரம் முதல், ஆங்கிலத்தில் உருவான சமூக அறிவியல் அறிவைத் தமிழாக்குவது என்ற நிலை மாறி, எம்ஐடிஎஸ் ஆய்வாளர்கள் நேரடியாகவே தமிழில் எழுதலானார்கள். என்னுடைய கட்டுரைகளில் செம்பாதி நேரடியாகத் தமிழில் எழுதப்பட்டவை. லி.வெங்கடாசலம், கி.சிவசுப்பிரமணியன், ச.ஆனந்தி, சி.லட்சுமணன் முதலான பேராசிரியர்கள் ஆய்வுக் கட்டுரைகள் மட்டுமல்லாமல், வெகுசன இதழ்களிலும் எழுதிவருகிறார்கள். எம்ஐடிஎஸ் முன்னாள் இயக்குநர் எஸ்.நீலகண்டன் எழுதிய நூல்களை இங்கு தனித்துக் குறிப்பிட வேண்டும். கரூர் பகுதியில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள் பற்றிய அவருடைய 'ஒரு நகரமும் ஒரு கிராமமும்' என்ற நூல் அவருக்குத் தமிழ் அறிவாளர்களிடையே நட்சத்திர அந்தஸ்தைக் கொடுத்துள்ளது என்று சொல்லலாம். இதைத் தொடர்ந்து, நீலகண்டன் எழுதிய 'ஆடம் ஸ்மித் முதல் கார்ல் மார்க்ஸ் வரை', 'நவசெவ்வியல் பொருளியல்' ஆகியவை முதுநிலைப் பாடநூல்களாக மட்டுமல்லாமல், பொதுவாசகர்களும் படிக்கும்வண்ணம் அமைந்த சிந்தனை வரலாற்று நூல்கள் என்ற அறிந்தேற்பைப் பெற்றுள்ளன.

சென்ற பத்தாண்டுகளில் தமிழகத்தின் முக்கிய பொதுச் சமூக அறிவாளராகக் கவனம்பெற்றுள்ள ஜெ.ஜெயரஞ்சன், எம்ஐடிஎஸ் மாணவர். தமிழகப் பொருளாதாரச் சிக்கல்களை இந்திய/ உலகச் சூழலில் பொருத்திக்காட்டும் அவருடைய பார்வை தனித்துவமானது. ஆ.கலையரசனும் எம்.விஜயபாஸ்கரும் முன்வைத்துள்ள 'திராவிட மாதிரி' என்ற தமிழ்நாட்டின் சமூக-பொருளாதாரத்தின் மேம்பட்ட மாற்றத்தை விளக்கும் சட்டகத்தை அவர்கள் தமிழிலும் முன்வைத்துள்ளனர். தமிழ் இதழியலுக்குத் தலித்துகளின் பெரும்பங்களிப்பை ஆவணப்படுத்திய ஜெ.பாலசுப்பிரமணியம் எழுதிய 'சூரியோதயம் முதல் உதயசூரியன் வரை' என்ற நூல் எம்ஐடிஎஸ் ஆய்வேடாகத் தொடங்கியது என்பதும் சுட்டத் தகுந்தது. தமிழ்ச் சமூகம் சார்ந்த முக்கிய அயல்நாட்டு ஆய்வுகளைத் தமிழுக்குக் கொண்டுவரும் முயற்சியின் பகுதியாக தாமஸ் டிரவுட்மன் எழுதிய 'திராவிடச் சான்று' நூலையும் எம்ஐடிஎஸ் வெளியிட்டுத் தமிழ்ப் புலமையுலகில் பல அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இனிவரும் ஆண்டுகளிலும், எம்ஐடிஎஸ் நிறுவனத்தின் தமிழ்ப் பணிகள் தொடர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அனைவருக்கும் உள்ளது.

நடுப்பக்கக் கட்டுரைகளை ஒலிவடிவில் கேட்க...

ஆய்வுகள் தந்த புரிதல்

எம்.விஜயபாஸ்கர், பேராசிரியர், எம்ஐடிஎஸ்

நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சி குறித்த புரிதல்களை ஆராய்ச்சிவழியில் மேம்படுத்துவதில் எம்ஐடிஎஸ் மிகப் பெரிய பங்கை அளித்துள்ளது. குறிப்பாகத் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் போக்குகள் குறித்த எம்ஐடிஎஸ்ஸின் ஆய்வுகளும் குறிப்பிடத்தக்கவை.

கிராமப்புற வளர்ச்சி குறித்த அதன் ஆய்வுகள் முதன்மையானவை. குறிப்பிட்ட கால இடைவெளியில் இந்த ஆய்வுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே கிராமங்களில் திரும்பத் திரும்ப மேற்கொள்ளப்பட்டு, சமூக, பொருளாதார அம்சங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகள் மூலம் கிராமப்புற உற்பத்தி உறவுகள், சமூக உறவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், சாதியச் சிக்கல்கள் ஆகியவற்றைப் பற்றி காலத்துக்கேற்ற புரிதல்கள் கிடைத்துள்ளன. விவசாயத்தில் பசுமைப் புரட்சி, தொழில்நுட்ப அறிமுகம் போன்றவை எப்படிப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்தின என்பதும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த வகையில் எஸ்.குகன், ஜெ.ஜெயரஞ்சன் உள்ளிட்டோரின் பங்களிப்பு அதிகமிருந்தது.

இன்றைக்குச் சுற்றுச்சூழல் சார்ந்த பார்வையின் மையமாக உள்ள நீர் மேலாண்மை சார்ந்தும் ஆராயப்பட்டுள்ளது. அந்த வகையில் ஆராய்ந்த முதல் நிறுவனங்களில் ஒன்று எம்ஐடிஎஸ். ஆறு, ஏரி, கால்வாய் என விவசாயத்துக்கான பாசனம் தொடங்கி நகர்ப்புற நீர் மேலாண்மை வரை விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் அ.வைத்தியநாதன், எஸ்.ஜனகராஜன் உள்ளிட்டோரின் பங்கு குறிப்பிடத்தக்கது. ஏழ்மை குறித்து எஸ்.சுப்பிரமணியனின் ஆய்வுகள் பல கற்பிதங்களை உடைத்தவை. வருமானத்தை மட்டும் கணக்கில் கொண்டு ஏழ்மையை அளவிடுவது எப்படித் தவறு, எந்தெந்த மற்ற அம்சங்களைக் கணக்கில்கொள்ள வேண்டும் என்று அமர்த்தியா சென் உள்ளிட்டோர் சுட்டிக்காட்டிய வகையில் சுப்பிரமணியனின் ஆய்வுகள் அமைந்திருந்தன.

பொருளாதாரத் துறைக்கு வெளியே என்று பார்த்தால், விளிம்புநிலை மக்களின் வரலாறு எப்படிக் கட்டமைக்கப்படுகிறது, இயங்குகிறது என்பதை அய்யா வைகுண்டர் வழிபாடு, சந்தனக் கடத்தல் வீரப்பன் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு எம்.எஸ்.எஸ்.பாண்டியன் தனித்தனியாக ஆராய்ந்திருக்கிறார். அடித்தட்டு மக்களின் வரலாற்றை அவர்களின் வாழ்க்கை, நம்பிக்கைகள், அரசியல் வழியாக எப்படிப் புரிந்துகொள்வது என்கிற கோணத்தில் அவர் அணுகினார். பெரியாரின் தேசியம் குறித்த பார்வை, வர்க்க அடிப்படையிலான வரலாறு போன்ற அம்சங்கள் சார்ந்தும் அவர் கவனம் செலுத்தினார். தேவதாசிகள் குறித்து எஸ்.ஆனந்தியும் சூழலியல், வாழிட உரிமைகள் குறித்து அஜித் மேனன், கேரன் கெய்லோ உள்ளிட்டோரும் கவனம் செலுத்திவருகின்றனர்.

தமிழ்நாட்டில் சாதிக்கும் சாதி அதிகாரத்துக்கும் எதிரான அணிதிரட்டல் என்பது அரசியல் இயக்கங்கள், பொதுத் தளங்கள், நகர்ப்புற அதிகார வர்க்கம் ஆகியவற்றின் மூலமாக எப்படி இயங்கியது, மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி இங்கு எப்படிக் கூடுதலாகச் சாத்தியப்பட்டது என்பதை விளக்கும் ஆய்வுகள் வெளியாகியுள்ளன. இந்த வளர்ச்சி மாதிரியின் தனித்தன்மைகளை விளக்கும் வகையில் ஆ. கலையரசனும் நானும் எழுதிய 'தி திராவிடியன் மாடல்' நூல், அதன் தொடர்ச்சியே.

பக்கத் தொகுப்பு: செல்வ புவியரசன்